இந்த நான்கு ஆண்டுகளில் மருத்துவத்துறையில்

25,295 மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மே 5-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (03.05.2025) சென்னை மருத்துவக்கல்லூரி சார்பாக நடைபெற்ற தேசிய அளவிலான மருத்துவக் கல்வி மாநாட்டினை தொடங்கி வைத்து, போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்து, விழா பேரூரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

மருத்துவக் கட்டமைப்பு

தமிழ்நாட்டில் மருத்துவக்கட்டமைப்பு என்பது மிகப்பெரிய அளவில் இந்தியா மட்டுமல்ல உலக நாடுகளே பாராட்டும் வகையிலான மருத்துவக் கட்டமைப்பு தமிழ்நாட்டில் உள்ளது. 8713 துணை சுகாதார நிலையங்கள், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும், 279 வட்டார மருத்துவமனைகளும், 37 மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளும், 36 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளும், 22 இந்திய மருத்துவத்துறை சார்ந்த மருத்துவமனைகளும், 3 பல் மருத்துவக்கல்லூரிகளும், 2 பன்னோக்கு மருத்துவமனைகள் என்று ஏறத்தாழ 11876 மருத்துவக் கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது.

இந்தியாவில் 36 மாநிலங்கள் இருந்தாலும்கூட, இந்த அளவிற்கு மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்த வகையில் இந்த மருத்துவக் கட்டமைப்பு பல்வேறு வகைகளில் சாதனை படைத்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் எனும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களைத் தேடி, அதாவது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பிசியோதெரபி, டயாலிசிஸ் போன்ற நோய்களுக்கு வீடுகளைத் தேடி சென்று மருத்துவம் இந்த திட்டத்தின் நோக்கமாகும். முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் ஒரு கோடி பயனாளிகளை இணைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்கள். ஆனால் இந்த திட்டத்தில் தற்போது 2 கோடி 4 இலட்சம் பயனாளிகளை கடந்து வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. அதனால்தான் ஐ.நா மன்றம் கடந்த செப்டம்பர் திங்கள் 25-ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பொது சபை கூட்டத்தில் உலக நாடுகளில் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் எந்த பகுதி சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்று ஆராய்ந்த போது தமிழ்நாடு மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து தமிழ்நாடு மருத்துவத்துறைக்கு 2024-ஆம் ஆண்டிற்கான உலகளாவிய விருது United Nation Intergracy Task Force Award விருது ஐ.நா சபையால் வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம் திட்டம், பாதம் காப்போம் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி ஆய்வகம் திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என்று பல சிறப்புக்குரிய திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் புனேவில் இந்திய மருத்துவத்திற்கான மாநாட்டில் நமது துறையின் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார் சென்றிருந்தார்கள். நேற்றுக் காலை அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்ன நல்ல விஷயம், இந்தியா முழுமைக்கும் உள்ள அமைச்சர்கள், அலுவலர்களிடத்தில் தமிழ்நாட்டில் குறிப்பாக ஆயுஷ் (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி, யோகா) போன்ற பல்வேறு இந்திய மருத்துவத்துறையில் நாம் செய்து வரும் நல்ல விஷயங்களை அங்கே பட்டியலிட்டு காட்டச் சொன்னதாக தெரிவித்தார்கள். தமிழ்நாடு மருத்துவக்கட்டமைப்பில் மட்டுமல்ல, இந்திய மருத்துவத்திற்கும் கூட ஒரு சிறந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மாநாட்டினை மருத்துவர் தேரணி ராஜன் அவர்கள் மிகச் சிறப்பான வகையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 2000த்திற்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரி மாணவர்களை ஒரே இடத்தில் அமர வைத்து அவர்களை பயிற்றுவிப்பதாக இருந்தாலும் ஒரு இடத்தில் மாணவர்களை ஒருசேர நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவது என்பது யாரும் நினைத்து பார்க்க முடியாத விஷயமாகும்.

பணியிடங்கள் மற்றும் கலந்தாய்வு

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இதுவரை 25,295 மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது. மேலும் கடந்த மாதம் 48 பல் மருத்துவர்களுக்கு தேர்வு நடைபெற்றது. இந்த 48 பணியிடங்களுக்கு இதுவரை 11,720 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதில் தேர்ச்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 8,000த்திற்கும் மேற்பட்டவர்கள். இவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு, இடஒதுக்கீடு அடிப்படையில் 48 பணியிடங்கள் தேர்வு செய்யப்படும். அந்த அளவிற்கு வெளிப்படைத்தன்மையுடன் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக பணியிடம் நிரப்பப்பட்டு வருகிறது.

அண்மையில் 2,642 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. அதாவது இந்தியாவில் முதன்முறையாக அவரவர் விரும்பும் இடங்களுக்கே கலந்தாய்வு நடத்தி பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 4 ஆண்டுகளில் 42,718 பேருக்கு வெளிப்படைத் தன்மை யுடன் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணிமாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் விழா பேரூரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபால கிருஷ்ணன், சென்னை மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முரசொலி விநியோகப் பிரிவு ஆர்.பழனி மறைவு!

அலுவலகப் பணியாளர்கள் நேரில் அஞ்சலி!

சென்னை மே. 5 -

முரசொலி விநியோகப் பிரிவில் பணியாற்றி வந்த ஆர்.பழனி (வயது 38) நேற்று முன்தினம் (3.5.2025) மாலை 5மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கடந்த (29-4- 2025) தேதியன்று அலுவலகப் பணி முடிந்து செங்கல்பட்டு மாவட்டம் வாலாஜாபாத் அடுத்த நெய்யாடு பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்கு சென்னையில் இருந்து வாலாஜாபாத் வரையில் ரயிலில் சென்று அங்கிருந்து நெய்யாடு பாக்கத்திற்கு இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இரவு 9 மணி அளவில் ஆசூர் என்ற இடத்தில் எதிரில் லாரி அதிவேகமாக வந்ததால் நிலை தடுமாறி இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததில் முதுகுத் தண்டில் பலத்த அடிபட்டு சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் மருத்துவ சிகிச்சை அவருக்கு ஏற்றுக் கொள்ளாததால் நேற்று முன்தினம் (3.5.2025) மாலை 5 மணி அளவில் மறைவெய்தினார்.

தகவல் அறிந்ததும் முரசொலி அலுவலகப் பணியாளர்கள் நேரில் சென்று அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைவெய்திய பழனிக்கு சுகன்யா என்ற மனைவியும், நிமோஸ்ரீ என்ற ஒரு மகளும், லக்கி என்ற ஒரு மகனும் உள்ளனர். இவரது தந்தை மறைவெய்திய எம்.ரஞ்சன் முரசொலியில் அலுவலக உதவி யாளராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை மாவட்டம்

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப் பணிகள்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

துக்கோட்டை, மே 5 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப் பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (01.05.2025) அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராமப்புறங்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தி ன் கீழ், கொடிவயல் ஊராட்சியில் ரூ.43.13 லட்சம் மதிப்பீட்டிலும், விஜயபுரம் ஊராட்சியில் ரூ.41.20 லட்சம் மதிப்பீட்டிலும், பரவாக்கோட்டை ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாகக் கட்டப்படவுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலம் காக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இது போன்ற நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சி. நளினி, ஆர்.எஸ்.குமாரவேலன், அறந்தாங்கி வட்டாட்சியர் க.கருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

நீலகிரி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கீழ்குந்தா தீபக் பரதன் ஏற்பாட்டின் படி, நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு தலைமையில், தலைமை அரசு கொறடா தலைமை தேர்தல் பணிக்குழு செயலாளர் கா. ராமச்சந்திரன் சிறப்புரை ஆற்றி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஜெ.ரவிக்குமார் மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் வே. மதிமாறன் சிறப்புரை ஆற்றினார். பரமசிவன் ஆல்வின் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் கே. போஜன், பொ. லட்சுமி, வீரபத்திரன், கா. செல்வம், காளிதாசன், உதய தேவன், பிரேம்குமார், நந்தி ரவி, ரவி, வினோத்குமார், TKS. பாபு, சின்னான், சங்கர், ஜெகதீசன், விஜயகுமார், யசோதா, ராஜசேகர், திலீப் குமார், எம். ஈஸ்வரன், சத்தியநாதன், ராஜு, முத்து, கலீம், சாகுல் ஹமீது, வுன்சிலர் கஜேந்திரன், மகாலிங்கம், ஸ்ரீதர், சாஜு சதீஷ்குமார் நன்றி கூறினார்.

அரசின் முன்னோடித் திட்டங்கள் மற்றும்
வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் தமிழக அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்.பிரகாஷ், தே.மதியழகன், டி.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.- தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு!

கிருஷ்ணகிரி, மே 5 -

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் தமிழக அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் , சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய். பிரகாஷ், தே.மதியழகன், டி.ராமசந்திரன்(தளி) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்ததாவது

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில் இன்று இக்கூட்டத்தில் வருவாய் துறை சார்பாக 5 ஆண்டுகளுக்கு மேல் பட்டா பெறாதவர்களுக்கு பட்டா வழங்குவது, ஜூன் 4ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமை தொகை விண்ணப்பம் பெறும் பணிகள், முதியோர் உதவித் தொகை, புதிய நியாய விலை கடைகள் குறித்தும், ஊரக வளர்ச்சி துறை சார்பாக கலைஞரின் கனவு இல்லம் திட்டம், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டம், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (கிராமின்) திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் குறித்தும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் ஆகிய துறை சார்பாக பாதாள சாக்கடை திட்டம், விரிவான சாலைகள் திட்டம் குறித்தும், நெடுஞ்சாலை துறை சார்பாக விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் குறித்தும், வனத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள், மனவளர்ச்சி செவின் குறைபாடு பயிற்சி மையங்கள், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள், மீட்பு திட்டம் குறித்தும், வேளாண்மை துறை சார்பாக ஃபெஞ்சல் புயலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கியது குறித்தும், தோட்டக்கலைத்துறை சார்பாக ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுக்கான இயக்க திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் குறித்தும், இந்து சமய அறநிலையங்கள் துறை சார்பாக புதிய திருத்தேர் திருப்பணி, மலர் வணிக வளாகம், புதிய நந்தவனம் அமைத்தல், புதியதாக உதவி ஆணையர் அலுவலகம், புதியதாக 5 ஆய்வாளர் அலுவலகம் ஆகிய பணிகள் நடைபெறுவது குறித்தும், தாட்கோ சார்பாக சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில் முனைவுத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மற்றும் அனைத்து துறை முதன்மை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முரசொலி விநியோகப் பிரிவு -

மறைந்த ஆர்.பழனிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 5-

முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்து வந்த பழனி அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2025) மாலை இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்து வந்த இளைஞரான திரு.பழனி அவர்கள், எதிர்பாராத விதமாக நிகழ்ந்த சாலை விபத்தொன்றில் சிக்கி, உயிரிழந்தச் சோகச் செய்தி அறிந்து பெரிதும் துயருறுகிறேன்.

தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியில், இவரது பெற்றோரும் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைதியான இயல்பினரான தம்பி திரு. பழனி அவர்களின் மறைவினால், ஆற்றொணாத் துயருக்கு உள்ளாகியுள்ள அவரது துணைவியார் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் முரசொலி ஊழியர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், மே 5 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் 06.05.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து கழகத் தலைவரின் அவர்களின் ஆலோசனைகள் குறித்து

2. "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!", சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்

3. பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு -

கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல்மாநகரில் ஜூன் 1ஆம் நாள் கூடுகிறது!

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஸ்ரீவஞ்சியம்மன் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மேற்கு ஒன்றிய செயலாளர் துரை.தமிழரசு, பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தெண்டபாணி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.